அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 7

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்: 14** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தமிழிலுள்ள உயிர்மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை
    1. இருநூற்றுப்பதினாறு
    2. நூற்று இருபத்தாறு
    3. இருநூற்று நாற்பத்தேழு
    4. இருநூற்றுப்பதினேழு

2. குதிரை கனைக்கும். அதுபோல ஆடு
    1. பிளிறும்
    2. கத்தும்
    3. குரைக்கும்
    4. சீறும்

3. பன்னிரண்டு என்பதைப் பிரித்தெழுதினால்
    1. பத்து + இரண்டு
    2. பன் + இரண்டு
    3. பதின் + இரண்டு
    4. பன் + னிரண்டு

4. சங்க இலக்கியப் பாடல்களின் கருப்பொருளாக அமைந்தவை
    1. காதல், பக்தி
    2. காதல், வீரம்
    3. வீரம், பக்தி
    4. பக்தி, அறம்

5. கவிஞர் கவிதையைச் சுவைபட எழுதினார். இதில் அடைமொழி
    1. கவிதை
    2. சுவைபட
    3. எழுதினார்
    4. கவிதை

6. முதலாவது உலகத் தமிழராய்ச்சி மாநாடு நடைபெற்ற நாடு
    1. இந்தியா
    2. மலேசியா
    3. ஈழம்
    4. பிரான்சு

1 2 3 4

7. மயில்கள் சோலையில்
   1. ஆடின
   2. ஆடியது
   3. ஆடினார்கள்
   4. ஆடுகின்றது

8. எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்போம். இச்சொல்லியம்
   1. வினாச்சொல்லியம்
   2. கூற்றுச்சொல்லியம்
   3. மெய்ப்பாட்டுச்சொல்லியம்
   4. விருப்புச்சொல்லியம்

9. வன்னிப் பகுதியில் அடங்கும் மாவட்டம் அல்லாதது
   1. மன்னார்
   2. வவுனியா
   3. முல்லைத்தீவு
   4. அம்பாறை

10. ஈழத்தமிழர்களால் நாட்டுப்பற்றாளர் நாளாக நினைவுகூரப்படுவது
    1. அன்னை பூபதி நினைவுநாள்
    2. மாலதி நினைவுநாள்
    3. அங்கயற்கண்ணி நினைவுநாள்
    4. மில்லர் நினைவுநாள்

11. பனை + ஓலை என்பதைப் புணர்த்தி எழுதினால்
    1. பனைவோலை
    2. பனையோலை
    3. பனைஓலை
    4. பனைய்யோலை

12. கூத்துகளைப் பழக்கி மேடையேற்றுபவர்
    1. ஆசிரியர்
    2. அண்ணாவியார்
    3. கவிஞர்
    4. வணிகர்

13. குழலிக்குப் பரிசு கிடைத்தது. இதில் வந்துள்ள வேற்றுமை உருபு
    1. த்
    2. அது
    3. ஐ
    4. கு

1 2 3 4

14. கடலும் கடல் சார்ந்த இடமும்
    1. முல்லை
    2. குறிஞ்சி
    3. மருதம்
    4. நெய்தல்

15. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படுவது
    1. மூன்றாம் வேற்றுமை
    2. முதலாம் வேற்றுமை
    3. நான்காம் வேற்றுமை
    4. இரண்டாம் வேற்றுமை

16. தமிழரது உணவின் சிறப்புத்தன்மையாகக் கருதப்படுவது
    1. உறைப்புக் குறைவாக இருப்பது
    2. அறுசுவையும் மருத்துவக் குணங்களும் கலந்திருப்பது
    3. காய்கறிகளை மட்டும் உண்பது
    4. சமைக்காமல் உண்பது

17. வெற்றி என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. வாகை
    2. சோம்பல்
    3. தோல்வி
    4. வீரம்

18. கற்றான் என்னும் இறந்தகால வினைமுற்றை எதிர்காலமாக்கினால்
    1. கற்கிறான்
    2. கற்கின்றான்
    3. கற்பான்
    4. கற்பித்தான்

19. காரே உன் நீரையெல்லாம் கள்வன் கவர்ந்தானோ? இதில் கார் என்பது
    1. மழை
    2. முகில்
    3. வெய்யில்
    4. தண்ணீர்

20. நிலவன் சுடச்சுட தேநீர் குடித்தான். இதில் சுடச்சுட என்பது
    1. இணைமொழி
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்குத்தொடர்
    4. அடுக்கிடுக்குத்தொடர்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|

21. வயவும் வயல் சார்ந்த நிலமும்
    1. குறிஞ்சி
    2. முல்லை
    3. பாலை
    4. மருதம்

22. பிரித்தானியருக்கு அடிபணியாது வன்னியை ஆண்ட மன்னர்
    1. கயிலாயவன்னியன்
    2. எல்லாளன்
    3. கோவலன்
    4. சங்கிலியன்

23. படித்தான் என்ற இறந்தகாலச் சொல்லை எதிர்காலமாக்கினால்
    1. படிக்கிறான்
    2. படிப்பான்
    3. படிப்பிப்பான்
    4. படி

24. ஈழத்தில் கூத்துகள் ஆடப்படும் இடங்களில் ஒன்று
    1. மட்டக்களப்பு
    2. தமிழகம்
    3. நூலகம்
    4. கொழும்பு

25. மாறன் கட்டிய வீடு. இதில் வரும் பெயரெச்சம்
    1. மாறன்
    5. கட்டிய
    6. வீடு
    7. பெயரெச்சம் இல்லை.

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.**

1. **படி**

பெயர்: ______________________________

வினை: ______________________________

2. **கலை**

பெயர்: ______________________________

வினை: ______________________________

(6 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

1. நான் தமிழ்ப் பள்ளியில் தமிழ் படிக்கிறேன்.
2. அப்பா தோட்டத்தில் வேலை செய்கிறார்.
3. வானத்தில் பறவைகள் கூட்டமாகப் பறக்கின்றன.
4. போர்த்துக்கேயர் வணிகம் செய்ய ஈழத்திற்கு வந்தனர்.
5. இலையுதிர் காலத்தில் மரங்களிலிருந்து இலைகள் உதிரும்.

**வாழிடமொழி:**

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

(5×2=10 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தில் கூத்துகள் ஆடப்படும் இடங்களுள் இரண்டினை எழுதுக.

2. வன்னி பழந்தமிழரது நிலமாக விளங்கியமைக்குச் சான்றுகள் இரண்டு எழுதுக.

3. ஓரினத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் இரண்டினை எழுதுக.

4. சங்ககால மக்களின் வாழ்வியல் முறை எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது?

5. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

6. நீ பாடத்தைப் படி. இது எவ்வகைச் சொல்லியம்?

7. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவை அமையுமாறு சொல்லியம் ஒன்றினை எழுதுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றை எழுதுக.**

| | **பெயரெச்சம்** | **வினையெச்சம்** | **வினைமுற்று** |
|---|---|---|---|
| எழுது | | | |
| படி | | | |
| ஓடு | | | |

(9 X 1 = 9 புள்ளிகள்)

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பச்சைக் கிளிதான் பறந்து வந்து
பாட்டுப் பாடுது
இச்சைக்கினிய கதைகள் கூறி
இதயம் கவருது
அச்ச மின்றித் தோளில் அமர்ந்து
மழலை கூறுது
மிச்ச மின்றிக் கோவைப்பழங்கள்
தின்று தீர்க்குது
உச்சிக் கொப்பில் பறந்தே ஏறித்
தூங்கிக் கிடக்குது.

க. வேந்தனார்

1. பாட்டுப் பாடும் பறவை எது?

______________________________________________

2. அது எவ்வாறு இதயத்தைக் கவர்கின்றது?

______________________________________________

3. அது எதில் அமர்ந்து கொண்டு மழலை கூறுது?

______________________________________________

4. அது உச்சிக் கொப்பில் ஏறி என்ன செய்கிறது?

______________________________________________

5. கிளி தின்று தீர்த்த பழங்கள் எவை?

______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சங்ககாலம்
2. தமிழர் பண்பாட்டு அடையாளங்கள்
3. நான் பார்த்த பனிப்பொழிவு நாள்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - பனி பொழியும்போது பார்த்த காட்சிகள்
   - அன்றைய நாளில் பெற்ற அனுபவம்
   - பனிப்பொழிவால் ஏற்படும் நன்மைகள், தீமைகள்

4. சுற்றுலா

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - சென்ற இடம்
   - பார்த்த விடயங்கள்
   - பெற்ற பயன்

(15 புள்ளிகள்)

# பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

தமிழீழத்தில் வாழ்ந்த சான்றோருள் பேரறிஞராக விளங்கியவர் விபுலாநந்த அடிகள். இவர் 1892ஆம் ஆண்டு மட்டக்களப்பில் உள்ள காரைதீவில் பிறந்தார். இவரது இயற்பெயர் மயில்வாகனன். இவர் இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார்; உயர் கல்வி கற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். விபுலானந்த அடிகள் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பெரும் தொண்டாற்றினார். இலங்கையில் பல்கலைக்கழகங்கள் இயங்கத் தொடங்கியபோது, தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக இவர் பணிபுரிந்தார். விபுலாநந்த அடிகள் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகள் தமிழ்த் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இக்கட்டுரைகள் மதங்கசூளாமணி என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. விபுலாநந்த அடிகள் காரைதீவிலுள்ள சாரதா வித்தியாலயம், திருகோணமலையில் உள்ள இந்துக்கல்லூரி போன்ற பல பள்ளிகளை நிறுவினார். இவை அவரது அழியாத அடையாளங்களாக இன்றும் திகழ்கின்றன.

1. விபுலாநந்த அடிகளாரின் இயற்பெயர் என்ன?

______________________________

2. இவரது திறனாய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ள தொகுப்பின் பெயர் என்ன?

______________________________

3. விபுலாநந்த அடிகள் தேர்ச்சி பெற்றிருந்த மொழிகளை எழுதுக.

______________________________

5. இவர் யாருடைய கல்வி வளர்ச்சிக்காகத் தொண்டாற்றினார்?

______________________________

6. விபுலாநந்த அடிகள் நிறுவிய பள்ளிகள் எவை?

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. அழைப்பிதழை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

**இசைப்பிரியா கலைப்பள்ளியின் முத்தமிழ் விழா - 2023**

அன்புடையீர்!

ஆண்டுதோறும் இசைப்பிரியா கலைப்பள்ளி நடத்தும் முத்தமிழ் விழா இவ்வாண்டும் நடைபெறவுள்ளது.

**நிகழ்வுகள்:**

- மங்கல விளக்கேற்றல்
- வரவேற்புரை
- முத்தமிழ் - சிறப்புப் பேச்சு
- மெல்லிசைப் பாடல்கள்
- பட்டிமன்றம்
- சலங்கை ஒலி
- நன்றியுரை

**இடம்:** கலை அரங்கம், இசைப்பிரியா கலைப்பள்ளி

**காலம்:** **29.01.2023** ஞாயிற்றுக்கிழமை 10:00 மணி

**தொடர்புகளுக்கு:** **302 701 47 15**

விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**ஒழுங்கமைப்பு:** இசைப்பிரியா கலைப்பள்ளி

1. இசைப்பிரியா கலைப்பள்ளியில் வெள்ளிவிழா நடைபெறவுள்ளது. ( )
2. இவ்விழாவில் மெல்லிசைப் பாடல்கள் இடம்பெறும். ( )
3. இவ்விழா சனிக்கிழமை நடைபெறும். ( )
4. நிகழ்வுகளில் பட்டிமன்றமும் ஒன்றாகும். ( )
5. விழாவின் இறுதியில் நன்றியுரையும் இடம்பெறும். ( )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 09 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |